சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 03.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 5766/E/2024**

திரு.பழனியப்பன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை - 622 005. — பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 17.02.2026 மற்றும் 28.04.2026 ஆகிய தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத தகவல் அலுவலர் திருமதி.ஆ.சுமதி (எ) சுதந்திரா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), புதுக்கோட்டை அவர்கள் சார்பு திரு.ஆரோக்கியராஜா, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை அவர்கள் இவ்வாணையத்தில் 03.06.2026-ல் நேரில் ஆஜராகி, 29.05.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 28.04.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின் அடிப்படையில், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள இனம் 5-க்கான தகவலானது பொதுத் தகவல் அலுவலரின் 27.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டு, மேற்படி தகவலை பெற்றுக்கொண்டு மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடம் சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான கடிதத்தில், பென்னமராவதி தாலுகா, கண்டியாநத்தம் கிராமம் 613/2,3 மற்றும் 624 ஆகிய புல எண்கள் தொடர்பாக கேட்கப்பட்ட தகவல்கள் 27.05.2026 அன்று

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்களால் தான் கோரிய தகவலை மனம் திருப்தியளிக்கும் வகையில் பெற்றுக்கொண்டேன் எனவும், எனவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்திடுமாறு ஆணையத்தைக் கோரியுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5766/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-VI,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை- 600 005.

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின்
கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
புதுக்கோட்டை - 622 005.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.பழனியப்பன், த/பெ.க.சின்னடைக்கன்,
க.எண்.370, அஞ்சுழளிப்பட்டி,
வலையப்பட்டி (அஞ்சல்),
பொன்னமராவதி (வட்டம்),
புதுக்கோட்டை மாவட்டம் - 622 411.

Copy to: File MP/PA,